REGD. No. M. 6311 ✶ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 24உ சனி (8—1—55) ★ ★ வெளியூர்: மார்கழி 25உ ஞாயிறு (9—1—55) [இதழ் 179

'டிராக்டரு'க்கு எதிராக யானை!

உத்திரப் பிரதேசத்திலுள்ள நிபுணர்கள் பலர், நிலங்களை உழுவதில் இயந்திர சாதனமான 'டிராக்டரு'க்குப் பதிலாக யானைகளை உபயோகித்தால் செலவு குறையுமென்று கருதுகிறார்களாம்.

இதைப் பரிசோதனை செய்வதற்காக சீதாப்பூர் மாவட்டத்திலுள்ள ஒரு சர்க்கார் பண்ணையில் யானைகளையே கட்டி நிலத்தை உழுகிறார்களாம்.

இதுபற்றிக் குறிப்பிடுகையில் உ. பி. மராமத்திலாகா உதவி மந்திரி, ஒரு யானையின் விலை ரூ. 4,000-தான் என்றும், யானைக்குத் தேய்மானமோ, 'ரிப்பேர்' செலவுகளோ செய்ய வேண்டியதில்லை என்றும், ஒரு யானை சராசரி 40 வருடங்கள் வேலைக்குப் பயன்படும் என்றும் கூறியிருக்கிறார்!

"ஜாதியை ஒழிக்க ஒரு 'புனிதப்போர்' தேவை"

ஐந்தாண்டு திட்டத்தை மக்களுக்கு உணர்த்த!

கூத்தும் - காலட்சேபமும் நிகழ்த்தப்படுமாம்!

ஐந்தாண்டு திட்டத்தில் நடவடிக்கைகளை பொதுவாக நாட்டு மக்களுக்கும், குறிப்பாகக் கிராம மக்களுக்கும் உணர்த்துவதற்காக, கூத்து—காலட்சேபம் ஆகிய பிரச்சார சாதனங்களை மேற்கொள்ளுவது என அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இத்துறையில் கூத்தாடவும், காலட்சேபம் செய்யவும் முன்வருகிறவர்களுக்கு, மாதா மாதம் பொருளுதவியும் தருவதென அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

வடநாட்டில் பல கிராமப் பகுதிகளில் நடிக்கப்பட்டு வரும் 'மது கிராமம்' என்ற 'அமரா காவொன்' நாடகத்தைத் தென்னிந்திய மொழிகளில் நடிக்க ஏற்பாடு செய்வதெனவும், அவ்வாறு நடிக்க முன்வரும் நாடகக் குழுவினருக்கு அதற்காகச் செலவாகும் ஆரம்பச் செலவுத் தொகையை அரசாங்கம் கொடுக்கவும் தயாராக இருக்கிறது.

கல்வி பெறாத சிறுவர்கள் கல்வி பெறுவதை முக்கிய நோக்கமாகக் கொள்ளாமல், வேலையின்றி படித்திருப்பவர்களுக்கு வேலை கொடுப்பதையே ஒரு நோக்கமாகக் கொண்டு ஓராசிரியர் பள்ளிகளை நிறுவி இருப்பதுபோல், ஐந்தாண்டு திட்டத்தின் பலாபலன்களை நாட்டு மக்களுக்கு அறிவிப்பது என்ற போர்வையில், வேலையின்றி இருக்கும் சில படித்தவர்களுக்கு இதன் மூலம் குறிப்பிட்ட சில காலத்திற்காவது வேலை கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. கூத்து-காலட்சேபத்தின் மூலமாக ஐந்தாண்டு திட்டத்தின் விளைவுகளை மக்கள் அறிந்து கொள்ளத் தவறிவிடுவார்களானாலும், ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருந்து வரும் வேலையற்றோருக்கு வேலை தருவது என்ற நோக்கம், இதன் மூலம் கொஞ்சமாவது நிறைவேறக்கூடும் என்பதில் சந்தேகமில்லை!

ஜனாதிபதியைக் கவிழ்க்கச் சதி!

கம்யூனிஸ்டு, ராடிகல் கட்சியினர் கைது

அர்ஜெண்டைனாவின் ஜனாதிபதியான பெரோனை, அதிகாரத்திலிருந்து விரட்டுவதற்கான சதிச் செயல்கள் புரிந்ததாக கம்யூனிஸ்டு, ராடிகல், கன்சர்வேடிவ் ஆகிய 3 கட்சிகளையும் சேர்ந்த 18 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனராம். இந்தப் பதினெட்டுப் பேர்களில் ஆசிரியைகளும், இரயில்வே சிப்பந்திகளும், டாக்டர்களும் அடங்கியுள்ளனராம்.

இந்த 18 பேர் மீதும், மாநிலத்தின் பாதுகாப்புக்கு உலை வைக்கும் நோக்குடன் சதிச் செயல்கள் செய்தார்கள் என்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

உரிமை மனு நிராகரிப்பு!

எர்ணாகுளம், ஜன. 7—

சிறையிலிருந்துவரும் திரு—கொச்சி சட்டசபை உறுப்பினர்கள் 6 பேரும் சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி கோரி தாக்கல் செய்திருந்த மனுக்களை, திரு-கொச்சி உயர் நீதிமன்ற பிரதம நீதிபதி கே. டி. கோஷியும், நீதிபதி எம். எஸ். மேனனும் நிராகரித்துவிட்டிருக்கின்றனர்.

இவர்கள் ஆறுபேரும் திருதமிழக இணைப்புப் போராட்ட வழக்குகள் சம்பந்தமாக தற்போது காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். சட்டசபை உறுப்பினர்கள் என்ற முறையில் தங்களுக்கு விசேட உரிமைகள் இருப்பதாகவும் அவர்கள் செய்துகொண்ட மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களை ஜாமீனில் விடுவிக்க ஏற்கனவே பல கோர்ட்டுகள் மறுத்துவிட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திரு - தமிழக இணைப்புப் போராட்டம் நடைபெற்றபோது நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து, ஏ. குஞ்சன் (நாடார்), எம். வில்லியம் எம். பி., தாதலிங்க (நாடார்), எம். டி. அனந்தராமன், டி. டி. டேனியல், ஏ. எம். சைமன் ஆகிய இந்த ஆறுபேரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த ஆறுபேருந்தான் சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளக்கோரி திரு-கொச்சி உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இவர்கள், சர்க்காரைக் கவிழ்ப்பதற்காகப் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டு சதிகள் வகுத்தனரென்று வழக்குத் தொடரப்பட்டு, அவ்வழக்குகள் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணையிலிருந்து வருகின்றன.

தேசியக் காங்கிரஸ் தலைவர்கள் கைது

'சட்டவிரோதமான பிரசுரங்களைக் கையில் வைத்திருந்தனர்' என்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு, வட ரொடீஷியாவிலுள்ள ஆப்பிரிக்கர் தேசிய காங்கிரசின் தலைவர்கள் மூன்றுபேர் போலீசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனராம்.

"தீண்டாமை ஒழிப்புக்கு ஜாதியைத் தகர்ப்பது தவிர்க்க முடியாதது"

"மதங்களனைத்திலும் தீண்டாமை ஊடுருவிக் கிடக்கிறது"

அமைச்சர் ஜகஜீவன் ராம் சிந்தும் கண்ணீர்

ஆக்ரா, ஜன. 6—

"இந்திய சமுதாய அமைப்பில் ஜாதி ஏற்பாடு ஒரு களங்கமாகும். மனு காலத்திலிருந்து இது நடைமுறையில் இருந்து வருகிறது; இருப்பவன்—இல்லாதவன் என்ற பிரச்சினைதான் பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளில் இருந்துவருகிறது. இந்தியாவிலுள்ள பிரச்சினையோ, தாழ்ந்த ஜாதியாளிலிருந்து ஒரு உயர்ந்த ஜாதியானை இலகுவாகக் கண்டறியும் வகையில் பகட்டாக இருந்து வருகிறது."

"சமுதாய சமத்துவம் ஏற்படாமல் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது. சமுதாயக் கொடுமைகளுக்குப் பலியாகி, அதில் நெளிந்துகொண்டிருப்பதால் தாங்கள் அனுபவித்து வரும் தொல்லைகளுக்கு எதிராக, அம்மக்கள்தான் கிளர்ந்து எழ வேண்டும்!"

—இவ்வாறு, பீகார் மாநில பிற்பட்ட வகுப்பினர் காங்கிரஸ் மாநாட்டைத் திறந்துவைத்தபோது, இந்தியப் பேரரசின் அமைச்சர் ஜகஜீவன் ராம் அவர்கள் அறிவித்தார்.

மற்றவர்களை வீழ்த்தி பிற்பட்ட மக்கள் முன்னேற்றமடைய வேண்டும் என தாம் கூறவில்லை எனவும், அனைவருக்கும் முன்னேற்றமும் வாய்ப்பும் சமமானதாக இருக்க வேண்டுமென்பதுதான் தாம் கூறுவதாகவும் மேற்படி அமைச்சர் மேலும் பேசும்போது குறிப்பிட்டார்.

அதே அமைச்சர் ஜகஜீவன் ராம், சென்ற டிசம்பர் 31-ந் தேதி டில்லி வானொலியிலிருந்து பேசும்பொழுது பின்வருமாறு கூறியுள்ளார்:—

(4-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியை மீண்டும் பணிபுரிய நியமித்ததற்கு எதிராக!

700 மாணவர்கள் பள்ளியிலிருந்து வெளியேறினர்!

பாலக்காடு, ஜன. 6—

கொடுவாயூர் உயர்நிலைப் பள்ளியின் வகுப்புகள் அனைத்திலும் படித்துவரும் மொத்தம் 850 மாணவர்களில், சுமார் 700 மாணவர்கள், கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப் பிறகு நேற்று பள்ளிக்கூடம் திறக்கப்பட்டதும், தங்கள் தங்கள் வகுப்புக்களைவிட்டு வெளியேறிவிட்டனர். மிசஸ் மேரி ஜோசப் என்ற ஆசிரியை மீண்டும் அதே பள்ளியில் பணிபுரிய நியமித்ததைக் கண்டிக்கும் வகையிலேயே, இம்மாணவர் கிளர்ச்சி நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்படி பள்ளியிலிருந்து ஆசிரியை மேரி ஜோசப் வெளியேறும் வரை, தாங்கள் பள்ளிக்குத் திரும்புவதில்லை என மாணவர்கள் தீர்மானித்துக் கொண்டுள்ளனர். இம்முடிவை நேற்று கூடிய பெற்றோர்களும் முழுமனதுடன் தெரிவித்துள்ளனர்.

ஆசிரியை மேரி ஜோசப்பும், அவருடைய கணவரான டி. எல். ஜோசப்பும், ஆசிரியையை வேறு பள்ளிக்கு மாற்றிவிட்டதின் காரணமாக, அதே பள்ளி முன் எற்கனவே சாகும்வரை உண்ணாவிரதம் இருந்ததாகக் கருதத்தக்கது. அம்மாற்றுதலுக்காக, மேற்படி பள்ளியின் தலைமை ஆசிரியர் மீதும், மாவட்டக் கழக அதிகாரிகள் மீதும் ஆசிரியை உள்ளெண்ணமும் கற்பித்துள்ளார். உண்ணாநோன்பு இருந்தகாலத்தில்மேற்படி தம்பதிகள் கைது செய்யப்பட்டதும், மாவட்டக் கழகத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொடுத்த வாக்குறுதியின்மீதும் அவர்கள் உண்ணாநோன்பைக் கைவிட்டனர். வாக்களித்தபடியே ஆசிரியை அதே பள்ளியில், புதிய மாவட்டக் கழகத்தாரால் நியமிக்கப்பட்டார். அதை ஏற்றுக்கொள்ள மறுத்தே மேற்படி ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் இறங்கி உள்ளனர்.

2,000 மாணவிகளின் வேலைநிறுத்த வெற்றி

ஆசிரியை மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டார்!

அதனால் கல்வித் துறைக்கும் பள்ளி நிர்வாகிகளுக்கும் பிணக்கு!

புதுடில்லி, ஜன. 6—

சால்வான் மகளிர் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியையாக மிஸஸ் இரஜினி குமார் பணி புரிந்து வந்தார். அவ்வம்மையார், கல்வி விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டிருக்கிறதென்றும், தவறான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் மேற்படி பள்ளிக்கூட நிர்வாகிகள்மீது குறை கூறி, சென்ற டிசம்பர் மாதம் 21-ம் நாள், தனது பதவியை ராஜினமா செய்துவிட்டார். அவ்விலகல் மனுவை, நிர்வாகிகளும் ஒப்புக்கொண்டனர்.

இது கண்டு, அப்பள்ளியில் படித்துவரும் 2,000 மாணவிகள், தலைமை ஆசிரியை இரஜினி குமாரின் வேலை விலகல் மனுவை ஒப்புக்கொண்டதற்காக பள்ளி நிர்வாகிகளைக் கண்டித்தும், ஆசிரியையை மீண்டும் வேலைக்கு நியமிக்க வேண்டுமெனக் கோரியும், பள்ளி செல்லாமல் வேலைநிறுத்தம் செய்யத் தொடங்கினர்.

அரசாங்கக் கல்வித் துறையினர் குறுக்கிட்டு, இரஜனி குமாரை அப்பள்ளியின் தலைமை ஆசிரியையாக நியமித்து,பள்ளிக்கூடத்தின் நடைமுறைகளை அரசாங்கம் ஆராய்ந்து அறிவதாகவும் அறிவித்தனர். அக்கட்டளைக்கொப்ப ஆசிரியையும், இன்று பள்ளிக்குச் சென்றார்.

ஆனால் பள்ளி நிர்வாகமோ, ஆசிரியை பள்ளிக்குள் நுழைவதை சட்ட விரோதமாகும் எனக் கூறி, அவரை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. நிர்வாகத்தின் இப்போக்கு, அரசாங்கக் கல்வித் துறை கட்டளைக்கு சோவிரோதமானதாகும். மேற்படி பள்ளிக்கூடம், தனது செலவில் 90 சதவிகிதத்தை அரசாங்கத்திட...

(4-ம் பக்கம் பார்க்க)

மகிழ்ச்சி நிலவுக-கைத்தறியாளர் உள்ளத்தில்!

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 8—1—1955 சனி

விஞ்ஞான வைரிகள்!

மத வழியில் அறிவை அடகு வைத்துவிட்டவர்கள், அறிவு ஆராய்ச்சி வழி வளம் பெற்று வளர்ந்துவரும் மெய்ஞான நோக்கை முழு விருப்புடன் ஒப்புவதோ, ஆர்வத்துடன் பின்பற்றுவதோ என்றும் நடைபெருததாகும். ஆனல், மதப் பிடிப்பில் சிக்குண்டு கிடக்கும் சிலர், தங்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள வாய்ப்பு—வசதியின் காரணமாக, விஞ்ஞான வழியின் சிறப்பையும், அவ்வழியை மக்கள் பின்பற்ற வேண்டுமெனத் தீவிரமாகப் பேசிவருவதையும் நாம் தினம் தினம் கண்டு வருகிறோம். இதற்கான அடிப்படை புரிந்து கொள்ள இயலாத பெரும் புதிரல்ல. விஞ்ஞான உலகத்தில் சஞ்சரிப்பதினல் பொது மக்களிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கின்ற சிறு ஆதரவைக் கொண்டு, வேகமாகத் தேய்ந்துவரும் மத வழியை, மேலும் தேயவிடாமல் கூடுமானவரை தடுத்துவிட முடியும் என்ற நப்பாசையினலேயே, விஞ்ஞான உலகில் சில மத வெறியர்கள் ஆட்டம் போட்டு வருகின்றனர்.

“விஞ்ஞானத்தின் பெரும் சிறப்புகளை அவர்கள் புகழ்ந்து பேசின போதிலும், மத அறிவைவிட விஞ்ஞான அறிவு மேம்பாடு உடையது என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்குமானல், அவர்கள் மத வழியை விடுத்து சிறந்த விஞ்ஞான வழியையல்லவா பின்பற்ற முன்வந்து இருப்பர்? எப்பொழுது அவர்கள் அவ்வாறு நடந்துகொள்ள முன்வரவில்லையோ, அதிலிருந்தே விஞ்ஞான வழியைவிட மத வழிதான் மற்றவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு, பின்பற்றத்தக்கது என்று ஏற்படவில்லையா?” என அவர்கள் முரண்படும் செயலைக் கண்ட சாதாரண மக்கள் கருதிக் கொள்ளுவர். அதனல் விஞ்ஞானத்தைவிட மத வழிதான் பின்பற்றத் தக்கது என மக்கள் முடிவு கட்டிக்கொள்ளுவர். இதன் பலனக விஞ்ஞானத்திற்குக் கொடுக்கும் பெருமையைக் காட்டிலும் மத வழிக்கே என்றும்போல் மக்கள் பெருமை அளிப்பர். இதனல் விஞ்ஞான வழியின் உயர்வை ஒப்புக் கொண்டபோதிலும், வழக்கமாக மத வழிக்குக் காட்டிவரும் பயபக்தியைக் கைவிடாது இருப்பர். அந்நிலையில் தேய்ந்துவரும் மத வழி மேலும் சிறிதுகாலத்திற்குத் தேய்ந்து போகாத ஒரு சூழ்நிலை ஏற்படும்.” இந்தப் பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கத்தான், மத நோக்குடைய சிலர், வேண்டுமென்றே விஞ்ஞான உலகில் நுழைந்து வெறுக்கத் தகுந்த செயல்களைச் செய்து வருகின்றனர். இதுவுமல்லாமல், மத வழியினர் சிலர் விஞ்ஞான உலகில் புகுந்திருப்பதற்கு மற்ருெரு சாதாரண காரணமும் உண்டு. அதாவது, தூர்ந்துவரும் மதவழியினரிடத்தும், வளர்ந்துவரும் விஞ்ஞான நோக்குடைய மக்களிடத்தும் ஒரே காலத்தில் பாராட்டுதலையும் ஆதரவையும் பெற அவர்கள் விரும்புவதேயாகும்.

இதன் விளைவு, விரும்பத்தகாத, வேண்டப்படாத, வேதனை தரத்தக்க நிலைமையையே நாட்டில் உண்டாக்கி இருக்கிறது. விஞ்ஞானக் கருவிகளால் தாங்கள் பெறும் சுகத்துக்காக மட்டுமே விஞ்ஞான வழியை மேற்கொள்ளுவதும் அதே காலத்தில் விஞ்ஞானத்தின் அடிப்படை நோக்கை உதறித் தள்ளுவதும், மக்களிடையே நிலைத்துவிட்டன. இது மட்டுமா? விஞ்ஞானப் பொருட்கள் போதிக்கும் படிப்பினையை அறிந்து கொள்ளவேண்டுமே என்ற எண்ணத்தைக் கூட பெரும்பான்மை மக்கள் பெருமல் இருக்கின்றனர்.

இத்தகைய ஆர்வம் தோன்ருததினலேயே, அணுவின் அற்புத ஆற்றலும், நீர்வளியில் மறைந்துள்ள பேராற்றலும் கண்டறியப்பட்டுள்ள அளவிற்கு, விஞ்ஞானக் கண்ணேட்டத்தின் அடிப்படை மக்களிடை வளராமல் இருந்து வருகிறது. விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் இருபதாம் நூற்ருண்டு பிற்பகுதியின் ஆரம்பத்தில் வந்து நிற்கிறது. ஆனல், இக்கண்டுபிடிப்புகளெல்லாம் மூலமாக உள்ள விஞ்ஞானக் கண்ணேட்டத்தின் அடிப்படையோ புரோகிதன் முளைத்த காலத்திலேயே தேங்கிப் போய் இருக்கிறது. விஞ்ஞானப் பொருள்கள் முன்னேறியுள்ள நிலைக்கும்—விஞ்ஞான அடிப்படை குணத்திற்கும் காலத்தில் பல நூறு ஆண்டுகள் வித்தியாசப்படுகின்றன. பொருளுக்கும், அப்பொருளுக்கு அடிப்படையாக உள்ள குணத்திற்கும் உள்ள கால வேற்றுமை களையப்பட வேண்டும். இக்களையும் பணி சாதாரண முயற்சியிலும், குறுகிய கால அளவிற்குள்ளும நிறைவேறக் கூடியதல்ல. அதற்கு உடனடியாகத் தேவைப்படுவது, கல்வி பெறுகின்ற அனைவருக்கும், விஞ்ஞானக் கல்வி வேற்றுமை காட்டாமல் போதிக்கப்பட வேண்டுவதேயாகும். இதுவே முதற்பணி—முக்கியப் பணி.

கல்வி, குறிப்பிட்ட ஒரு சிறு கூட்டத்தின் சொந்தச் சொத்தாக ஒரு காலத்தில் இருந்து வந்தது. அச்சிறு கூட்டத்தின் ஆஸ்ரமத்திற்குள் சிறைபட்டுக் கிடந்த கல்வி விடுவிக்கப்பட்டு, அண்மையில் தான் அது பொது மக்கள் அனைவருடையவும் பொதுச் சொத்தாக ஆக்கப்பட்டது. கல்வி பொதுவுடைமையாக்கப் படுவதால், அக்கல்வியால் தாங்கள் மட்டுமே பெற்றுவந்த சீரும் சிறப்பும் பறிக்கப்பட்டு விடுகிறதே என, அதுவரை கல்வியால் உயர்வு பெற்று உல்லாசபுரியில் களித்துக் கிடந்த கயவர்கள் கல்வி பொதுவாகக் கூடாதென்பதற்குத் ‘தகுதி—திறமை’ பேசிடக் கிளம்பினர். அனுபவம், ‘தகுதி—திறமை’ வாதத்தின் வேரற்றத் தன்மையை வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது.

இதன் விளைவாக ‘எங்களுக்குத்தான் கல்வி வரும்— மற்றவர்களுக்குக் கல்வி வராது’ என ஆணவ முரசம் கொட்டிக் கொண்டிருந்தவர்களின் முரசம் கிழித்தெறியப்பட்டது.

மீண்டும், இதுகாலை, ‘தகுதி-திறமை’ விஞ்ஞானக் கல்வி போதனையில் தலை தூக்கத் தொடங்கி இருக்கிறது. டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள், இப்பொழுது, விஞ்ஞானத் துறையில் ‘தகுதி—திறமை’ காலற்ற வாதத்தைப் புகுத்தி இருக்கிறர்.

நாகபுரி விஞ்ஞானக் கல்லூரிக்கு ‘கவுரவ விருந்தினராக’ டாக்டர் பட்டாபி சீதாராமையாவும், காலஞ் சென்ற டாக்டர் எஸ். எஸ். பட்நகர் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அக்கல்லூரியில் மொத்தத்தில் 1,100 மாணவர்கள் விஞ்ஞானக் கல்வி பயின்று வருகின்றனர். இது கண்ட கவர்னர் பெருமான், முற்கால ஆஸ்ரமக் கல்விப் போக்கை உள்ளத்தில் வைத்துக் கொண்டு, ‘கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதில் கண்டிப்பான கட்டுப்பாடு இருக்க வேண்டும்; ‘விளக்குவதற்கு காலமுமில்லை—வாய்ப்புமில்லை’ எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

டாக்டர் பட்டாபி, யார் என்பதை நம்மவர் நன்கு அறிவர். அவர் ஒரு விஞ்ஞானியல்ல—ஆரிய ஆஸ்ரமத்தில் இருக்க வேண்டிய அற்புதப் பிறவியாவார் அவர். எவ்வளவோ கனவான்கள், கால வேகத்தால் கவர்னர்களாகக் கொலுவீற்றிருப்பதுபோல், டாக்டர் பட்டாபியும் ஒரு கவர்னராகக் கொலு வீற்றிருக்கிறர். அவருடைய அந்தக் கால காங்கிரஸ் நடவடிக்கை, அவர் வேலூர் சிறைவாசத்தில் இருந்த வேளையில் கறைபட்டுப் போயிருப்பதாகும். விஞ்ஞான உலகிற்கும் அவருக்கும் வெகு தூரம். நிற்க,

அவர் கூற்றை, மட்டந்தட்டாமல் விடவில்லை, அதே கூட்டத்தில்பங்குகொண்ட, காலஞ்சென்ற விஞ்ஞானி டாக்டர் எஸ். எஸ். பட்நகர். “விஞ்ஞானமின்றி, நாட்டு நிர்வாகமும் கிடையாது—தத்துவமும் கிடையாது—சிறந்த கவிதை கூட கிடையாது” என கவர்னரின் கருத்தைக் கண்டித்துவிட்டார்.

டாக்டரைப் பின்பற்றி பரோடாவில் நடைபெற்ற 42-வது விஞ்ஞானக் காங்கிரஸ் மாநாட்டில், ‘முற்கால ஆசிரியர்கள் வகுத்த வழியைப் பின்பற்றி தராதரம் பார்த்து விஞ்ஞானக் கல்வியை போதிக்க முன்வரவேண்டும்’ என வரவேற்புக் குழுத் தலைவியரான அன்சா மேத்தா அம்மையார் அலறி இருக்கிறர்கள். அம்மையார் கல்வித் துறையில் சரதாரண இடத்தில் இருப்பவர்களும் அல்ல-பரோடா பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக உள்ளவர்கள். கூடிய விரைவில் அம்மையாருக்கு, இந்தியப் பேரரசின் அமைச்சர் குழுவில் இடம் ஒதுக்கப்போவதாகவும் தெரிய வருகிறது.

விஞ்ஞானக் கல்வியை பலரும் பெறுவதைத் தடுத்து, அதை குறிப்பிட்ட ஒரு சிலருக்கே போதிக்க வேண்டுமென கருத்துக் கொண்டிருக்கும் இந்தக் கவர்னர் சீமானும், கல்வித் துறை சீமாட்டியும் விஞ்ஞானக் கல்விக்கு நண்பர்களா அல்லது வைரிகளா? என்றுதானே கேட்கத் தோன்றுகிறது. அவர்கள் கருத்து அவர்களை வைரிகள் எனக் கொள்ளும்படித்தானே கூறுகிறது? இவர்களையும், இவர்கள் போன்ற கருத்துடையவர்களையும் விஞ்ஞான வைரிகள் எனக் கூறுவதில் தவறு என்ன?

சிறிய தொழில்களில் நவீன முறையை புகுத்த முயற்சி

உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்படும்; மூலப் பொருள்கள் கடனுகத் தரப்படும்

இந்த நிதி ஆண்டில் (1955–56) சிறுசிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான திட்டமொன்றை சிறு கைத்தொழில்கள் போர்டு அங்கீகரித்திருக்கிறது.

தச்சுவேலை, கொல்லர் வேலை, மண்பாண்டத் தொழில், தோல் தொழில் ஆகிய தொழில்களில் புதிய கருவிகளையும், புது முறைகளையும் புகுத்த ஏற்பாடு செய்வதற்கான ‘தொழிலகங்கள்’ அமைக்கப்படுமென்றும், அம்மாதிரியான ‘தொழிலகங்களை’ அமைக்க மாநில சர்க்கார்கள் திட்டங்கள் தயாரிக்குமென்றும், அந்தந்த இடங்களின் நிலைமையைப் பொறுத்தே அவைகளின் அளவும் அமைப்பும் இருக்குமென்றும் கூறப்படுகிறது.

மேலும், மரவேலை, செருப்புகள் செய்தல், விளையாட்டுச் சாமான்கள், கண்ணுடி, பூட்டு, கத்தி ஆகிய பல திறப்பட்ட சாமான்களையும், சைக்கிள் வண்டிக்கான சில உறுப்புகள் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கும் உதவியளிப்பதும் இத்திட்டத்திலுள்ள ஒரு அம்சமாகும்.

இது தவிர, பொருட்களின் ‘தரத்தை’ உயர்த்தவும், அவற்றின் உற்பத்திச் செலவைக் குறைக்கவும் புதுமாதிரி ‘டிசைன்’கள் வகுக்கவும் செய்து, புதிய வழிகளில் அப்பொருட்கள் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதோடு, சிறு நிறுவனங்களால் கட்டுப்படியாகக் கூடிய முறையில் செய்ய முடியாதனவற்றைக் கவனிக்க ‘மத்திய தொழியகங்கள்’ அமைக்கப்படலாமெனவும் தெரிகிறது.

உற்பத்தி சக்தி அபிவிருத்தியாகாத பல தொழில்களுக்கென உதவி செய்வதற்காக, ஒவ்வொரு விதமான தொழிலுக்கும் ஒரு மத்திய நிறுவனம் வீதம் அமைக்க வேண்டுமெனவும் அக்குழு தீர்மானித்திருக்கிறது.

புதுமுறைகளில் அப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கு வசதியாக, நிலம், கட்டிடம், உபகரணங்கள், மூலப்பொருட்கள் ஆகியவற்றை இந்த மத்திய நிறுவனம் கடனகக் கொடுத்துதவ ஏற்பாடுகள் செய்யப்படும்.

அடுத்த நிதி ஆண்டில், வைத்தியக் கருவிகள், விஞ்ஞானக் கருவிகள் பவுண்டன் பேனக்கள், இன்னும் இவைபோன்ற 45 வகையான தொழில்கள் அபிவிருத்திக்கான ஏற்பாடுகள் செய்யப்படுமெனவும் கூறப்படுகிறது.

விற்பனை வரி பாக்கி: வசூலிக்க புது சலுகை

வியாபாரிகளுக்கு ஆறு மாத தவணை அளிக்கப்படுகிறது

சென்னை, ஜன. 6—

இதுவரையிலும் தங்கள் வியாபாரத்தை மறைத்துக்கொண்டு வந்தவர்களும், ஆண்டுதோறும் எவ்வளவு விற்பனையாகிறது என்பதைக் கணக்குக் காட்டாத வியாபாரிகளும், இப்போது தாங்களாகவே முன்வந்து தங்களுடைய கடந்தகால விற்பனைக் கணக்குகளைக் காட்டுவதுடன், தங்களுடைய வியாபாரத்தின் அளவுக்குக் கட்டவேண்டிய விற்பனை வரியையும் கட்டிவிட்டால் அவர்கள் மீது விற்பனை வரிச் சட்டத்தின் கீழுள்ள தண்ட விதிகள் பிரயோகிக்கப்பட மாட்டாதென்றும், விற்பனை வரி இலாகாவுக்கு அபராதம் செலுத்தும் வகையில் எவ்வித தண்ட வரிகளும் கட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

தொழில் நுணுக்கக் குழுவினர் வருகை

இந்தியா—அமெரிக்கா தொழில் நுணுக்க ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் அமெரிக்காவிலிருந்து இரண்டு தொழில் நுணுக்கக் குழுவினர் இங்கு வந்துள்ளனராம்.

இவ்விரு குழுவினரில் ஒரு குழு, சிறுரக எஞ்சினீயரிங்தொழில் உற்பத்தி பிரச்சினைகள் பற்றியும், மற்ருெரு குழு, இந்தியத் தொழில்களில் புதிய கருவிகளின் உபயோகம்—அக்கருவிகளை உற்பத்தி செய்யும் புதுமுறைகள் ஆகியவை பற்றியும் இந்திய சர்க்காருக்கு ஆலோசனைகள் கூறும் என்று சொல்லப்படுகிறது.

இந்தியா முழுமையிலுமுள்ள தொழிற்சாலைகளுக்கெல்லாம் அக்குழுவினர் சென்று பார்வையிடுவர் என்றும், இவர்களைப்போன்றே மற்றும் 13 பேர்களடங்கிய குழு ஒன்று, மரைகள், திருகாணிகள், சுவரக் கத்திகள், கண்ணுடி ‘ஷீட்டு’கள், விளக்குகள் தயாரித்தல் போன்ற தொழில்கள் பற்றி ஆலோசனை கூற இன்னும் சில திங்களுக்குள் இந்தியா வருவர் என்றும் தெரியவருகிறது.

அறியாமையால் 3 லட்சம் மக்கள் குருடராகின்றனர்!

கெனியாவில் குருடர்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது. சுமார் 3,00,000 மக்களுக்கு சிகிச்சை வசதி தேவை என்று தெரிகிறது. அசுத்தம், தூசி, அழுக்கு, அறியாமை இவற்ருலேயே கண்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது.

நீரோட்டத்திலுள்ள ஒரு சில கிருமிகளும், தூசியிலுள்ள சில கிருமிகளும் கண்களைப் பாதிப்பதால், கீழ் இமையில் புண் ஏற்படுகிறது; சில கிருமிகள் விழித்திரையையும் தாக்கி, இரணமுண்டாக்குகின்றன.

‘நீர்க்குருடு’ என்ற வியாதிக்கு பரிகாரம்தேடி, சென்ற 40 ஆண்டுகளாக வைத்திய நிபுணர்கள் ஆராய்ச்சி செய்கிருர்கள். இது ஓர் ‘சூக்கும அங்க ஜீவி’ மூலம் பரவுகிறது. இந்தக் கிருமியைத் தாங்கிச் செல்லும் ஒருவித ஈ, நீர் மூலம் நோயைப் பரப்புகிறது. இந்த ஈயை கொல்லும் வழி இப்போது ஏற்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ரயில் கட்டண சலுகை

தேசீய விஸ்தரிப்புத் திட்டங்களின் கீழ் நடைபெற்று வருகின்ற வேலைகளில் தாங்களாகவே பங்கெடுத்துக் கொள்ளும் ஊழியர்கட்கு பிரயாணச் சலுகைகள் அளிக்க இரயில்வே போர்டு முடிவு செய்துள்ளதாம். பள்ளி மாணவர்கட்கு அளிக்கப்படுவதுபோன்ற சலுகைகள் அவர்களுக்கும் அளிக்கப்படுமாம்.

புதுவை தரைச் சுங்கம் நீக்கப்பட்டதின் விளைவு

நேர்மையற்ற 'வியாபாரக் கழுகு'களின் தீவிரப் பதுக்கல்

புதுச்சேரி, ஜன. 7—

தரைச் சுங்கம் எடுத்துவிடப்படும் என்ற செய்தி வெளியானதும், புதுவையில் முக்கிய வியாபாரப் பகுதியான 'டூப்ளே வீதி'யில், அதன் எதிரொலி காணப்படுகிறதாம்.

சென்னை மாநிலத்தின் மற்ற பகுதிகளிலிருந்து சாமான்கள் வாங்க புதுவை சென்ற மக்கள், கடைகளில் பெரும்பாலான சாமான்கள் காணப்படவில்லை என்பதை அறிந்தனர்.

ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் மறைக்கப்பட்டுவிட்டன என்று சொல்லப்படுகிறது.

தங்களிடம் கையிருப்பில் உள்ள சாமான்களில் நவம்பர் முதல் தேதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டதை உடனடியாக சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சர்க்கார் வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

அது மட்டுமின்றி, ஒவ்வொரு திங்கட்கிழமை யன்றும் கடந்த வார விற்பனை, மீதமுள்ள கையிருப்பு இவை பற்றிய கணக்குகளையும் சர்க்காருக்கு அறிவிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்காரின் உத்தரவை மீறும் வியாபாரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பரந்த நோக்கம் பாரீர்! - பாரபட்சமிருப்பது காணீர்!

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்களை மேற்கு வங்கத்தில் புனரமைப்பதற்கு மட்டும் ரூ. 50 கோடி செலவழிக்கப்பட்டுவிட்டதாக மத்திய சர்க்கார் புனரமைப்பு இலாகா அமைச்சர் மேகர் சந்த் கன்ன தெரிவித்திருக்கிருர்

1955—57 ஆகிய இரண்டாண்டுகளில், இதற்கென சர்க்கார் வரவு-செலவில் (பட்ஜெட்) சுமார் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

இதுவரை நடைபெற்ற வேலைகள் பற்றி அவர் குறிப்பிடுகையில், கிராமங்களிலும், நகரங்களிலும் சுமார் 3 லட்சம் குடும்பங்களுக்கு மேல் புனரமைக்கப்பட்டுள்ளன வென்றும், வேலை தேடித்தரும் நிறுவனங்கள் மூலம் 1,71,871 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு வேலை தேடித்தந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சென்ற இரண்டு மாதங்களில், மேற்கு வங்க மாநிலத்தில் மட்டும் ரூ. 2½ கோடிக்கு மேற்பட்ட 30 புனரமைப்புத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதையும் அறிவித்திருக்கிருர்.

★

அவர்களுக்கென்ன--- அள்ளித் தருகிருர்கள் !

சென்ற ஆண்டு (1954) இறுதி வரையிலும், மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள 28,000-த்துக்கும் அதிகமான அகதிகளுக்கு சுமார் ரூ. 7,52,00,000 வரை தற்காலிகமான உதவித் தொகை அளிக்கப்பட்டதாம்.

அந்த 28,000 அகதிகளில் 2,430 பேர் வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களெனவும், அவர்களுக்கு மொத்தமாகச் சுமார் ரூ.-57,43,000 அளிக்கப்பட்டதென்றும் கூறப்பட்டுள்ளது.

அகதிகளுக்கு அளிக்கப்பட்ட மொத்த மதிப்பீடான ரூ.-7,52,00,000-ல், ரூ. 5,62,000-க்கும் அதிகமான தொகை ரொக்கப் பணமாகவும், 1,25,00,000 ரூபாய்க்குச் சொத்துக்களாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

சென்ற டிசம்பர் திங்கள் இறுதி வாரத்தில் மட்டும் 682 அகதிகளுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது என்றும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை சுமார் ரூ. 22,00,000 என்றும் கூறப்படுகிறது.

'சுகாதாரக் குறைவான' இடங்கள் பிரகடனம்

தஞ்சை மாவட்டத்தில், தரங்கம்பாடி, மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர் போன்ற 41 இடங்கள் 'சுகாதாரக் குறைவான' இடங்கள் என சுகாதார இலாகா டைரக்டர் அறிவித்திருக்கிருர். அந்த 41 இடங்களிலும் 'யானைக் கால்' வியாதி (பைலேரியா) ஏற்பட சாதகமான ஆபத்துகள் நிறைந்து காணப்படுகின்றன என்று அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

இதைப்போலவே, திருச்சி, தென்னூற்காடு ஆகிய இரு மாவட்டங்களிலும் சுமார் 20 இடங்கள் 'சுகாதாரக் குறைவானவை' எனவும் குறிப்பிட்டிருக்கிருர்.

7,000 பேருக்கு வேலை கிடைக்குமாம் !

திரு — கொச்சி மாநிலத்தில், மண் அரிப்பைத் தடுப்பதற்காக மாநில சர்க்கார், ரூ. 1 கோடி செலவில் திட்டமொன்றை மேற்கொள்ளுமாம்.

இத்திட்டத்தால் சுமார் 7,000 - பேருக்கு வேலை கிடைக்குமென்றும், இத்திட்டம் இத்திங்கள் இறுதி வாரத்திற்குள்ளாகவே ஆரம்பிக்கப்பட்டு விடலாமெனவும் தெரிகிறது.

அதே நேரத்தில், ஆலைகளில் வேலை செய்யும் சுமார் 8,000 - தொழிலாளர்களுக்கென 'காலனி' ஒன்றை அமைக்க ரூ. 1 கோடி செலவில் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்படுமாம்.

பாண்டியன் நினைவுப் படிப்பகம்

இராமேஸ்வரம் ஜன. 5—

30—12—54 இரவு 10½ மணியளவில் மேற்படி படிப்பக உறுப்பினர் கூட்டம், தோழர் எஸ். துரைராசு தலைமையில் நடைபெற்றபோது இத்திங்கள் 18-ந் தேதியன்று பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டு, சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பிறப்பு

ஈரோடு தி. மு. கழகத் தோழர் இரா. பெருமாள் அவர்களின் துணைவியார் தோழியர் சுப்புலட்சுமி 5—1—55ல் ஆண் மகவொன்றைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும் நலம்.

'கலாச்சாரக் கண்ணடி'யை காண்கிருர் கவர்னர்!

வட நாட்டுக்காக வக்காலத்து வாங்கவில்லையாம்; வேற்றுமை இருந்தால் தீர்த்துக்கொள்ளலாமாம்!

கதா காலட்சேபத்தில் பிரகாசா பிரசங்கம்

"வடநாடு—தென்னடு என்று பிரிவினை பேசும் சக்திகள் இங்கே இருந்தபோதிலும், 'இந்தியா பூராவும் ஒன்று' என்னும் தத்துவத்தை இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள் அறிவுறுத்திக் கொண்டுதானிருக்கின்றன."

என்று சென்னை கவர்னர் பிரகாசா, சென்னை வன்னிய தேனம்பேட்டையில் நடைபெற்ற மகாபாரத காலட்சேபத்துக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியிருக்கிருர்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது :—

"வட நாட்டுக்காக நான் இங்கு வக்காலத்துப் பேசவில்லை. நமக்குள்ளே வேற்றுமைகள் இருந்தால் அவற்றை நாமே தீர்த்துக்கொள்ளலாம். அதற்காக மத விஷயங்களில் சண்டையிட வேண்டாம்; மாருக, நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவோம்."

"மகாபாரதமும் இராமாயணமும் நமது நாட்டின் புராதன கலாச்சாரத்தைக் காட்டும் கண்ணடிகள் போன்றவையாகும் நமது வாழ்க்கையில் எழுகின்ற சகல அம்சங்களும் இராமாயண, மகாபாரதத்தில் ஓவியங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கூறப்படாத எந்த ஒரு விஷயமும் உலகிலேயே இல்லை."

இவ்வாறு கூறிவிட்டு மேலும் அவர் தொடர்ந்து கூறினுர் :—

"கதா காலட்சேபக் கலை முதன் முதல் மகாராட்டிரத்தில் தான் தோன்றியது; அவர்களிடமிருந்தேதான் அக்கலை வட நாட்டிற்கும் தென்னட்டிற்கும் பரவியது."

அமெரிக்காவின் ஆசிய உதவி மாசற்றதாம்!

கொத்தலாவலையின் புதிய கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன. 7—

"சில ஆசிய நாடுகள் அமெரிக்கா பற்றி கொண்டுள்ள கருத்து தவருகவும், தவருன நோக்கத்திலும் உருவாகியதாகும்; நான் எனது அமெரிக்க சுற்றுப்பயணத்தின் போது இதைத் தெரிந்து கொண்டேன்,"

என்று இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, வானெலியில் பேசுகையில் கூறினுர் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது :—

"ஆசியாவிற்கு அமெரிக்கா செய்யும் உதவி நல்ல போக்குடன் கூடியது; அந்த உதவிக்குப் பின்னல் எவ்வித உள் நோக்கமும் கிடையாது என்று திருப்திகரமாக அறிந்தேன்; குறிப்பாகக் கம்யூனிசத்தை எதிர்ப்பதற்காக அமெரிக்கா உதவி செய்ய விரும்புகிறது. அமெரிக்காவிற்கு எதிராகச் செய்யப்படும் விஷமத்தனமான பிரச்சாரங்களை யாரும் நம்பக்கூடாது.

"காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டிருக்கும் ஆசிய நாடுகள் பொருளாதாரத் துறையில் உதவி பெற்று, கம்யூனிசத்தை எதிர்த்துப் போரிட வேண்டுமேயன்றி, அவைகள் வெளிநாடுகளுடன் இராணுவ ஒப்பந்தம் செய்து கொள்வது கூடாது," என்று தான் அமெரிக்காவில் எடுத்துக் காட்டியதாகக் கொத்தலாவலை குறிப்பிட்டார்.

கழகச் செய்திகள்

இராசபாளையம் தி. மு. க.

19—12—54ல் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் செயலாளர்: தோழர் சு. பாலகிருஷ்ணனின் விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு புதிய நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது :— செயலாளர்: ச. முத்துசாமி; துணைச் செயலாளர்: க. கார்மேகம்; பொருளாளர்: த. கனகசபாபதி. செயற்குழு உறுப்பினர்கள்: ம. பொன்னையா, சு. பாலகிருஷ்ணன், சு. சந்தரமகாலிங்கம், பி. சொரணம், கோ. வெள்ளைச்சாமி, தவசி, ச. கருப்பையா, ஐயப்பன், இராமச்சந்திரன், காளியப்பன், அச்சுதக்கனி, முத்து.

சென்னை 29-வது வட்ட தி. மு. க. (கிளை)

25—12—54ல் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், கிளைக்கழக இடைக்கால நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: ப. க. வேணுகோபாலன்; துணைச் செயலாளர்: அ. பொ. அரசு; பொருளாளர்: எம். வெங்கடேசன்; மாவட்டப் பிரதிநிதிகள்: ப க வேணுகோபாலன்; அ. பொ. அரசு. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் :— ப. க. வேணுகோபாலன், அ. பொ. அரசு, எம். வெங்கடேசன், கே. சண்முகம், டி. தாமோதரன், மு. பழனி, அ. தமிழ்ப்பித்தன், எம். ஏ. கரிகாலன், மோகன் முனுசாமி, அ. ச. வேலன், எல். லிங்கமூர்த்தி, இரா. லோகநாதன், ஏ. டி. சுந்தரம், கே. துரைக்கண்ணு.

திருவெண்காடு தி. மு. க.

29—12—54 மாலை 6½ மணியளவில் தோழர் காளிதாசன் தலைமையில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் டி. வி. சம்பத் அவர்களே மீண்டும் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைச் செயலாளர்: டி. என். காளிதாசன்; பொருளாளர்: எம். குசலவன்; மாவட்டப் பிரதிநிதி; எஸ். கேசவன்; நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: கே. பி. நவநீதம், எஸ். குப்புசாமி, இரா. இராமையா, சண்முகம், துரைக்கண்ணு, அகோரம், எஸ். சம்மந்தம். பின்னர், பிப்ரவரி இறுதிக்குள் கழக இரண்டாவது ஆண்டு விழாவை நடத்துவதெனவும், நாடகத் தடை சட்டத்தைக் கண்டித்தும், 10,000 பேருக்கு மேல் மக்கள் தொகை கொண்ட அப்பகுதிகளில் பொது மக்களுக்கு ஒரு நூல் நிலையமோ, பொழுது போக்கிற்கான பூங்காவோ ஏற்படுத்தாமலிருக்கும் ஊராண்மைக் கழகத்தாரைக் கண்டித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆலந்தூரில் தி. மு. கழக அமைப்பு

29—12—54 மாலை 4-30 மணியளவில், தோழர் ஆ. ம. வேலன் தலைமையில், தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தி. மு. கழகம் அமைக்கப்பட்டதின் அவசியம் குறித்துத் தோழர்கள் சிலர் பேசிய பின், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: பி. மகாலிங்கம்; துணைச் செயலாளர்: ஆ. ம. வேலன்; பொருளாளர்: எஸ். சுந்தரேசன்; செயற்குழு உறுப்பினர்கள் : பி. முத்துக்குமாரசாமி; பி. செல்லையன் (மணாளன்); ஜி எஸ். சின்னையன்; ஜி. இலக்குமணன்; வி. கோதண்டபாணி; ஜி. வேணுகோபாலன்; எஸ். பாவாடை; ஏ. எம். பதி; கே. ராமையன்; எஸ். எஸ்.

கைத்தறித் துணி விற்பனை

9—1—55 காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் நாகப்பட்டினம் தி. மு. கழகத் தோழர்கள், நகரின் பல பாகங்களிலும் சென்று கைத்தறித் துணிகளை விற்பனை செய்வார்கள்.

சின்னையன்; வீ. சீனிவாசன்; பி. இரகுநாதன்; ஜி. தங்கராசு; எம். நடேசன்; டி. பாண்டுரங்கன்; வி. முனியன்; என். செல்லமுத்து; ஏ. சுப்பிரமணியன். பின்னர் திராவிடர் திருநாளை சிறப்புறக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஊரக்கரை (முசிறிவட்டம்) தி. மு. கழகத் துவக்கம்

29—12—54ல், இவ்வூரிலுள்ள தோழர்கள் பலர், தோழர் க. முத்தையா தலைமையில் கூடி, தி. மு. கிளைக் கழகம் ஒன்றைத் துவக்கியதுடன் கழகநிர்வாகிகளையும் தேர்ந்தெடுத்தனர் :— செயலாளர் : பெ. செல்லப்பா ; துணைச் செயலாளர் : ஜே. சின்னசாமி ; பொருளாளர் : க. முத்தையா ; மாவட்டப் பிரதிநிதி : பழ. பெரியசாமி ; செயற்குழு தலைவர் : சி. வேணுகோபாலன் ; செயற்குழு உறுப்பினர்கள் : அ. பழனியாண்டி, மு. சதாசிவம், பொ. இரத்தினம், பெ. சின்னத்தம்பி, வீ. செல்லமுத்து, வை. அருணசலம், இரா. துரைசாமி.

மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம்

31—12—54 மாலை 7 மணிக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் ஏ. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், பொதுச் செயலாளர் அண்ணதுரை அவர்கள் மைத்துனர் அரங்கநாதன், தோழர் கே. ஆர். இராமசாமி அவர்களின் தாயார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்ட பிறகு, பொங்கல் விழாவை சிறப்பாக நடத்துவது என்றும், அதற்கான விழாக் குழு அமைத்தும், தேனீர் விருந்து நடத்திய வரவு—செலவு கணக்குகளை ஒப்புக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிவகளை-நெல்லைமாவட்டம் தி. மு. க. அமைப்பு

31—12—54 இரவு 7 மணிக்கு, தோழர் கே. ஆர். பி. மணிமொழியன் தலைமையில் நடைபெற்ற கழக அமைப்புக் கூட்டத்தின் போது, தோழர் பி. பால்ராஜ் செயலாளராகவும், பி. அழகேசன் துணைச் செயலாளராகவும், கா. தங்கையா பொருளாளராகவும், இருங்கோவேள் மாவட்டப் பிரதிநிதியாகவும், பெருமாள் விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 10—1—55ல் கழகத் துவக்க விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

மணச்சநல்லூர் தி. மு. க.

2—1—55 இரவு 9-30 மணிக்கு காந்தி பூங்காவில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கழக ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், இவ்வூர் ஊராண்மைக் கழக இலவச வாசக சாலையில் 'நம் நாடு' பத்திரிகையை வரவழைக்க ஊராண்மைக் கழகத்தாரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின், கழக நிர்வாகக் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: பு. ரெ. மாரிமுத்து; துணைச் செயலாளர்கள்: சி. அரங்கராசன், வெ. சி. பெரியசாமி; பொருளாளர்: ரெ. தங்கராசு; மாவட்டப் பிரதிநிதி: மு. கிருட்டிணன். செயற்குழு உறுப்பினர்கள்: பு. ரெ. மாரிமுத்து, கா. சுந்தரராசன், க. இராசய்யன், த. சண்முகம்; கோ. தம்பிதுரை,

ஒரே குடும்பத்தில் 17-பேர் கொலை

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த அரியார் எனுமிடத்தில், கிராமத்திலுள்ள ஒரு சிலரிடையே நிலத் தகராறு விஷயமாக ஏற்பட்ட சச்சரவுகள், ஒரே குடும்பத்திலுள்ள 17 பேரையுமே கொலை செய்யும் அளவுக்குள்ளாயிற்று.

நடு இரவில் சுமார் 50 பேர் ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு அக்கிராமத்தைத் தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 17 பேர் ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர் என்று செய்திகள் கூறுகின்றன.

புலி கொன்றால் பணம் தருவது யார்?

"தொழிலாளி ஒருவரைப் புலி அடித்துக் கொன்றுவிட்டால் அவர் குடும்பத்தாருக்கு நஷ்டஈடு அளிப்பது யார்?" என்ற கேள்விக்குப் பதிலிறுக்கும் வகையில் தொழிலாளர் நஷ்டஈடு சட்டத்தில் எவ்வித விதியும் காணவில்லை. காரணம், அம்மாதிரி ஒரு நிலைமை எதிர்பார்க்கப்படாததினால்தான், அவ்வித விதிகள் ஏதும் அச்சட்டத்தில் சொல்லப்படவில்லை.

இக்கேள்வி எழுவதற்குக் காரணமாயிருந்தவர், அசாம் பகுதியிலுள்ள தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்த ஒரு தொழிலாளியின் மனைவியாகும். சாபுகர் என்ற அந்தத் தோட்டத் தொழிலாளியை புலி ஒன்று தாக்கிக் கொன்றுவிட்டதாம். எனவே, அந்தத் தோட்ட முதலாளிதான் தனக்கு நஷ்டஈடு தரவேண்டுமென கோரிக்கொண்டு அத்தொழிலாளியின் மனைவி, உதவி கமிஷனரிடம் வழக்கொன்றைத் தொடர்ந்தாராம்.

வழக்கை விசாரித்த உதவி கமிஷனர், அத்தொழிலாளி தற்செயலாக மரணமுற்றதால் தோட்ட முதலாளிதான் நஷ்டஈடு தரவேண்டுமென்றும், நஷ்டஈடு தொகை ரூ. 1,200 என்றும் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

'உயிருக்கு ஆபத்து'—ஆவடியில் எதிரொலிப்பு!

ஆமதாபாத்—

உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் நடைபெறுகின்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றி விசாரிக்க மூன்று உயர்தர நீதிபதிகள் கொண்ட விசாரணைக் குழு (டிரிபியூனல்) ஒன்றை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை, ஆவடியில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் மாநாட்டின் போது கொண்டுவரப் போவதாக அ. இ. கா. குழு உறுப்பினர் திரிகம் பட்டேல் தெரிவித்திருக்கிறார்.

தடையுத்தரவு நீடிப்பு

திருச்சி, ஜன. 7—

திருச்சி, பொன்மலை, சீரங்கம் போன்ற இடங்களின் போலீஸ் எல்லைக்குள், தோழர் இராதாவின் 'இராமாயணம்' நாடகம் நடைபெறக்கூடாது என்று மேலும் 15 தினங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. அங்கு அமுலிலிருந்துவரும் 144 தடையுத்தரவும் மேலும் 15 நாட்களுக்கு நீடித்து பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

முன்னேற்றம் காணோம்!

இந்தியா — அமெரிக்க விமான ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும் வகையில் நடைபெற்று வருகிற பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் எதுவுமே காணப்படவில்லை என்றும், அமெரிக்காவின் நிலை மாறினால்தான் இந்த உடன்பாடு சாத்தியமாகும் என்று கருதப்படுவதாகவும் தெரிகிறது.

ஜாதியை ஒழிக்க

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"சட்டப்படி தீண்டாமை அகற்றப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டமும் தீண்டாமையை எந்தத் தன்மையிலும் எந்த உருவிலும் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. ஆனால், நடைமுறையிலோ, ஒவ்வொரு துறையிலும் தீண்டப்படாத மக்கள் தொல்லைகளையும் வேற்றுமைக் கொடுமைகளையும் அனுபவித்து வருகிறார்கள்."

"தீண்டாமை ஒழிப்பில் படித்தவர்களுக்கு நம்பிக்கை பிறந்தாலொழிய, தீண்டாமையை அழிக்க முடியாது. அரசாங்கம், அரசாங்கத் தொடர்பற்ற மற்றவர் ஊழியத்தினால்தான் இக்கறையைப் போக்க முடியும்."

"இந்தியாவில் உள்ள மதங்கள் அனைத்திலும் தீண்டாமை நஞ்சு, ஏதாவது ஒரு உருவில் அல்லது தன்மையில் ஊடுருவியே இருக்கிறது. இப்பிரச்சினை, இந்து மதம் அல்லது இந்து சமுதாயம் என்ற வரையறைக்குள் மட்டுமே கட்டுப்பட்டிருப்பதாக இல்லை. இது ஒரு தேசியப் பிரச்சினையாக மாறிவிட்டிருக்கிறது. எனவே, தேசிய நிலையிலிருந்து இதைத் தீர்க்க முயல வேண்டும்."

"தீண்டாமை ஒழிப்பில் மக்கள் முயற்சி மந்த நிலை அடைந்திருக்கிறது. உறுதி வாய்ந்த சமூகத்தை உருவாக்க, வன்மைமிக்க தேசத்தைக் காண, மக்களாட்சி முறை நடைபெற, ஒரு மனிதன் வாழ்வதற்குத் தகுந்ததாகச் சமூகத்தை அமைக்க இப்பொழுதுள்ள தீண்டாதார் துயரம் துடைக்கப்பட்டாக வேண்டும்."

"ஜாதி ஏற்பாட்டிற்கு எதிராக ஒரு 'புனிதப் போர்' தொடங்கியாக வேண்டும். பலாத்காரம், வெறுப்பு, சுரண்டல், பிணக்கு ஆகிய தீய உணர்வுகளை தீண்டாமை உருவாக்குகிறது. தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதற்கு, இப்பொழுதுள்ள ஜாதி அடிப்படையைத் தகர்த்தெறிய வேண்டியது தவிர்க்க முடியாததாகும்,"

ஆரம்பக் கல்வி ஆய்வுக் குழு

முதல் முதலாக சேலத்தில் பணி துவக்கம்

ஆரம்பக் கல்வியை எவ்வாறு திருத்தி அமைக்கலாம் என்பதைக் கண்டறிந்து கூறுவதற்கு சென்னை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் அழகப்ப செட்டியார் ஆய்வுக் குழு, சேலத்தில் முதல் முதலாகத் தன் பணியினைத் தொடங்கி இருக்கிறது.

சென்னை மாநிலத்திலேயே சேலம் மாவட்டத்தில்தான் கல்வி கற்றவர் தொகை நூற்றுக்கு 11-வீதம் இருப்பதாகவும், அதனாலேயே ஆய்வுக் குழு, தங்கள் பணியை முதல் முதலாக சேலத்தில் துவக்குவது எனத் தீர்மானித்ததாகவும் குழுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

2,000 மாணவிகளின்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மிருந்து மானியமாகப் பெற்றுக் கொண்டுவருகிறது.

எனவே, மாணவிகளின் வேலை நிறுத்தமும், ஆசிரியையின் நியமனமும், அரசாங்கக் கல்வித் துறைக்கும், பள்ளிக்கூட நிர்வாகத்திற்கும் பிணக்கைக் கொடுத்துவிட்டிருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

சங்கரன்கோவில்
சுவாமி சன்னதி காந்தியார் திடலில்
10-1-55 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர் :
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி

★

பாபநாசம்
தி.மு. கழக துவக்க விழா
கீழ வீதியில்
11—1—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

கைத்தறி விற்பனை

9—1—55 அன்று, பொதுச் செயலாளர் அறிக்கையின்படி, சென்னை 4-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் எம். எஸ். கே. உலகநாதன், மு. செல்வராசன், செ. இளந்தமிழன் ஆகியோர், தோழர் ஏ. எம். முத்தையா தலைமையில் 4-வது வட்டத்தில் கைத்தறி துணிகளை விற்பனை செய்வார்கள்.

* * *

9—1—55 காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை, சென்னை 35-வது வட்டத்(கோடம்பாக்கம்)தில், தி. மு. கழகத் தோழர்கள் கைத்தறித் துணியை தெருத் தெருவாக விற்பனை செய்வார்கள்.

திருவள்ளுவர் இளைஞர் கழகம்

9-1-55 காலை 10 மணிக்கு, சென்னை, மண்ணடி, இராசமன்னர் பாடசாலையில், திருக்குறள் வகுப்பு நடைபெறும். தோழர் சி. முருகேசனார் விளக்கவுரையாற்றுவார்.

'ஒரே ஆசை'—நாடகம்

13—1—55 இரவு 8 மணிக்கு, பம்பாய், பரேல் தாமோதர் ஹாலில், பாண்டுப் தி. மு. கழகப் படிப்பக வளர்ச்சி நிதிக்காக, பம்பாய் தி. மு. கழக நடிகர் குழுவினர் தரும் 'ஒரே ஆசை' எனும் நாடகம் நடைபெறும். கட்டணம் உண்டு.

தேயிலை ஏற்றுமதி வரி உயருகிறது

தேயிலை மீதுள்ள ஏற்றுமதி வரி, ராத்தலுக்கு 7 அணுவாக இருப்பது இனிமேல் 10 அணுவாக உயர்த்தப்படும் என்று இந்திய சர்க்கார் அறிக்கையில் காணப்பட்டுள்ளது.

இதுபோலவே தேயிலை ஏற்றுமதி கோட்டாவிலும் 2 சதவிகிதம் அதிகரிக்கப்படும். அதாவது, ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் அளவும், 4,580 ராத்தலிலிருந்து 4,650 ராத்தலாக உயர்த்தப்படுமாம்.

விஞ்ஞானம் தந்த 'புதுக் கருவி'கள்

"மனித வர்க்கத்தையே வேரறுத்துவிடும்"

இராதாகிருஷ்ணன் மனக்கொதிப்பு

"இனிமேல் உலக யுத்தம் ஒன்று ஏற்படுமானால் அந்த யுத்தத்தின் முடிவு வெற்றியாக இருக்காது. உலக முழுமையுமுள்ள அனைத்தும் நாசப்பட்டுவிடுவதைத் தவிர வேறு எதுவும் கிடைக்காது. விஞ்ஞானம் உருவாக்கித் தந்துள்ள புதுக் கருவிகளால் மனித வர்க்கமே வேரறுக்கப்பட்டுவிடும்."

இவ்வாறு, இந்திய உதவி ஜனாதிபதி இராதாகிருஷ்ணன், நாகபுரி நகரசபையினர் தமக்களித்த வரவேற்புக்கு நன்றி கூறிவிட்டுப் பேசுகையில் கூறியிருக்கிறார்.

நிறத் திமிர் படைத்தோரின் நேர்மையற்ற போக்கு

தென்னாப்பிரிக்க இந்தியர்கள் மீது 'கொடூரமான' நடவடிக்கை

60,000 பேருக்கு ஏற்படும் அல்லல்

தென்னாப்பிரிக்கச் சரித்திரத்திலேயே இதுவரையிலும் நடைபெற்றில்லாத மிகக் கொடூரமான ஒரு நடவடிக்கையை தென்னாப்பிரிக்க சர்க்கார் தற்போது மேற்கொண்டிருக்கிறது.

சர்க்கார் மேற்கொள்ளுகின்ற இந்நடவடிக்கைப்படி, ஜோகனஸ்பர்க் நகரின் மேற்குப் பகுதிகளில் வாழ்ந்துவரும் 60,000 வெள்ளையரல்லாதாரை அப்புறப்படுத்தி, நகருக்கு 6 மைல்களுக்கப்பாலுள்ள ஒரு இடத்தில் குடியேற்றப் போகிறார்களாம்.

இந்த 60,000 வெள்ளையரல்லாதாரும் வெள்ளையர்களுக்கு அருகிலேயே வாழ்ந்து வருவதால், வெள்ளை வர்க்கத்தினரின் 'புனிதத் தன்மை'க்கு ஊறு நேர்ந்து வருகிறதாகத் தென்னாப்பிரிக்க சர்க்கார் கருதுகிறார்களாம்!

அப்புறப்படுத்தப்பட இருக்கின்ற இந்த 60,000 'கருப்பர்'களில், ஆப்பிரிக்கச் சுதேசிகளான நீக்ரோவருடன் ஏராளமான இந்தியர்களும் உள்ளனர்.

சென்ற ஆண்டு பிப்ரவரித் திங்கள்தொட்டே, 'கருப்பர்' குடும்பங்கள் யாவும் ஜோகனஸ்பர்க் நகருக்கு வெளியே சென்று குடியேறிவிடும்படி அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இவர்களுக்கு மட்டுமின்றி, வெள்ளையரும், 'கருப்பர்'களும் வசித்துவரும் இடங்களுக்கிடையேயுள்ள இடங்களில் வசித்து வருவோரும் வெளியேறிவிட வேண்டுமென சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இவ்வறிவிப்புகளுக்கு இணங்க மறுத்து அவர்களெல்லோரும் வெளியேறாவிட்டால், மாஜிஸ்திரேட் உத்திரவு பெற்றுக்கொண்டு அவர்கள் பலாத்காரமாகத் தள்ளப்படுவர் எனவும் கூறப்படுகிறது.

இந்த அளவுடன் நின்றுவிடாமல், 'கருப்பர்'கள் குடியிருந்துவிட்டுக் காலி செய்யப்படுகிற எல்லா வீடுகளும் இயந்திரங்களால் இடித்துத் தகர்த்தெறியப்படுமெனவும் தென்னாப்பிரிக்க சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இதனால் ஏற்படவிருக்கின்ற விளைவுகள் எப்படிப்பட்டவைகளாயிருந்தாலும், தென்னாப்பிரிக்க சர்க்காரின் இந்த 'கருப்பர் வெளியேற்றத் திட்டத்'தை நாட்டு மக்களுடைய முழு பலத்தையும் திரட்டி, முழு மூச்சுடன் எதிர்த்துப் போராடுவதென ஆப்பிரிக்க தேசிய காங்கிரசும், தென்னாப்பிரிக்க இந்திய காங்கிரசும் திட்டமிட்டு முடிவு கட்டியிருக்கின்றன.

இந்த எதிர்ப்புத் திட்டத்திற்கு மதகுரு ஒருவரும், மற்றும் சில வெள்ளையரும் கூட ஆதரவு தருவதாகக் கூறப்படுகிறது.

விற்பனை வரி......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதில்லை என்றும் சென்னை சர்க்கார் வர்த்தக வரி இலாகா அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறது.

இச்சலுகை, இவ்வாண்டு (1955) ஜனவரி திங்கள் முதல் தேதியன்று முதல், ஜூன் முடியவுள்ள 6 மாத காலத்துக்கு அமுலிலிருக்குமென்றும் அவ்வறிக்கையில் காணப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், வியாபாரிகள் தாங்களாகவே முன் வந்து இதைச் செய்யாமல், விற்பனை வரி இலாகா அதிகாரிகள் நேரில் விசாரித்தறிந்து, வியாபாரிகள் தங்கள் கணக்குகளை மறைத்து வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அந்த வியாபாரிகளுக்கு இச்சலுகை தரப்படமாட்டாது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மைசூர் இருண்டது!

மின்சார வினியோகக் கம்பிகள் துண்டிப்பு!

மைசூர், ஜன. 8—

மைசூர் போர்ட்சிலுள்ள மின்சார 'டிரான்ஸ்பர்மேஷன்' நிலையத்துக்கருகில் மின்சார வினியோகக் கம்பிகள் துண்டிக்கப்பட்டுவிட்டதால் மைசூர் நகரம் பூராவிலும் நேற்றிரவு விளக்குகள் ஏதும் எரியாமல் ஒரே இருள்மயமாகக் காட்சியளித்ததாம். மாநிலமின்சார ஊழியர்கள், வேலை நிறுத்தத்தை மேற்கொண்ட கடந்த இரண்டு வார காலத்திற்கிடையே நேற்றிரவு மட்டும்தான் இவ்வித நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

நேற்றிரவு சுமார் 7½ மணிக்கெல்லாம் துண்டிக்கப்பட்ட மின்சார வினியோகம், இரவு 10 மணி வரையிலும்கூட மீண்டும் ஆரம்பமாகவில்லையாம்; இரவு சினிமா காட்சிகளும் நடைபெற முடியாமல் போய்விட்டதாம்.

மின்சார இலாகா ஊழியர்களின் இந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக பெங்களூர் நகரில் விதிக்கப்பட்டுள்ள 144 தடையுத்தரவை மீறியதாக மைசூர் மருத்துமனை ஊழியர்கள் சம்மேளனத்தின் தலைவரான ஆர். என். பால் என்பவரும், மின்சார இலாகா சிப்பந்தி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

* * *

சமரச முயற்சி?

தொழிலாளர்களின் இவ்வேலை நிறுத்தம் காரணமாக சமரசம் ஏற்படுத்தி வைப்பதற்காக மாநில காங்கிரஸ் குழுத் தலைவர் மின்சார மாநிலச் சங்கத்தின் தலைவரைச் சந்தித்துப் பேசி வருகிறார்.

ஒரே வாரத்தில் 950 குண்டர்கள் கைது

நாகபுரியில் காலிகளை ஒடுக்குவதற்கென போலீஸ் இலாகாவினர் நடத்திவரும் இயக்கமொன்று, ஒரு வாரத்தில் சுமார் 950 பேரைக் கைது செய்துள்ளனராம். இவர்களில் 903 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதென்றும் 289-பேர் தண்டிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

மேலும் சந்தேகத்திற்கிடமான இடங்கள் சிலவற்றைப் போலீசார் சோதனையிட்டதில் 61 கள்ளச் சாராய குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

இரண்டு பேர்கள் மட்டுமே உட்காரக் கூடிய 2 'கிளைடர்' விமானங்களை, விரைவில் பிரிட்டனிலிருந்து இந்தியா இறக்குமதி செய்யும் என்று கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.,

பொங்கல் பொங்குக-நேசவாளர் இல்லத்தில்!